## நவம்பர் – 24 – சனி

### புனித கொழும்பன்

### என் பாறையாகிய ஆண்டவர் போற்றி ! போற்றி ! திபா. 144:1

## முதல் வாசகம் : திருவெளிப்பாடு 11 : 4 – 12

சகோதர சகோதரிகளே! மண்ணுலகின் ஆண்டவர் திருமுன் நிற்கும் இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளுமே அந்த இரு சாட்சிகள்.யாராவது அவர்களுக்குத் தீங்கு இழைக்க விரும்பினால் அவர்களது வாயிலிருந்து தீ கிளம்பி அந்தப் பகைவர்களைச் சுட்டெரித்துவிடும். அவர்களுக்குத் தீங்கு இழைக்க விரும்புவோர் இவ்வாறு கொல்லப்படுவது உறுதி.தாங்கள் இறைவாக்குரைக்கும் காலத்தில் மழை பொழியாதவாறு வானத்தை அடைத்து விட அவர்களுக்கு அதிகாரம் உண்டு தாங்கள் விரும்பும்பொழுதெல்லாம் தண்ணீரை இரத்தமாக மாற்றவும், மண்ணுலகை எல்லாவகை வாதைகளாலும் தாக்கவும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.அவர்கள் சான்று பகர்ந்து முடித்தபின் படுகுழியிலிருந்து வெளியே வரும் விலங்கு அவர்களோடு போர் தொடுத்து, அவர்களை வென்று கொன்றுவிடும். சோதோம் எனவும் எகிப்து எனவும் உருவகமாக அழைக்கப்படும் அம்மாநகரின் தெருக்களில் அவர்களுடைய பிணங்கள் கிடக்கும். அங்கேதான் அவர்களின் ஆண்டவர் சிலுவையில் அறையப்பட்டார்.பல்வேறு மக்களினத்தார், குலத்தினர், மொழியினர், நாட்டினர் மூன்றரை நாள் அவர்களுடைய பிணங்கள் அங்குக் கிடக்கக் காண்பார்கள் அவற்றை அடக்கம் செய்யவிடமாட்டார்கள்.மண்ணுலகில் வாழ்வோர் அவற்றைக் குறித்து மிகவே மகிழ்ந்து திளைப்பர் ஒருவருக்கு ஒருவர் அன்பளிப்புகள் வழங்கிக்கொள்வர் ஏனெனில் இந்த இரண்டு இறைவாக்கினரும் மண்ணுலகில் வாழ்வோர்க்குத் தொல்லை கொடுத்திருந்தனர். அந்த மூன்றரை நாளுக்குப் பின் கடவுளிடமிருந்து வந்த உயிர்மூச்சு அவற்றுக்குள் நுழைந்ததும், அவர்கள் எழுந்து நின்றார்கள். அதைப் பார்த்தவர்களைப் பேரச்சம் ஆட்கொண்டது. அப்பொழுது விண்ணத்திலிருந்து எழுந்த ஓர் உரத்தகுரல், ”இவ்விடத்திற்கு ஏறி வாருங்கள்” என்று தங்களுக்குச் சொன்னதை அந்த இறைவாக்கினர்கள் இருவரும் மண்ணுலகின் ஆண்டவர் திருமுன் நிற்கும் இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளுமே அந்த இரு சாட்சிகள்.

**பதில்பாடல் :** ஆண்டவரே நீர் அளிக்கும் விடுதலை குறித்து அகமகிழ்வேன்

## நற்செய்தி : லூக்கா 20 : 27 - 40

அக்காலத்தில்உயிர்த்தெழுதலை மறுக்கும் சில சதுசேயர் இயேசுவை அணுகி, ”போதகரே, மணமான ஒருவர் மகப்பேறின்றி இறந்துபோனால் அவர் மனைவியைக் கொழுந்தனே மனைவியாக ஏற்றுக் கொண்டு தம் சகோதரருக்கு வழிமரபு உருவாக்க வேண்டும் என்று மோசே எழுதி வைத்துள்ளார்.இங்குச் சகோதரர் எழுவர் இருந்தனர். மூத்தவர் ஒரு பெண்ணை மணந்து மகப்பேறின்றி இறந்தார். இரண்டாம்,மூன்றாம், சகோதரர்களும் அவரை மணந்தனர். இவ்வாறே எழுவரும் மகப்பேறின்றி இறந்தனர். கடைசியாக அப்பெண்ணும் இறந்தார்.அப்படியானால் உயிர்த்தெழும்போது அவர் அவர்களுள் யாருக்கு மனைவி ஆவார்? ஏனெனில் எழுவரும் அவரை மனைவியாகக் கொண்டிருந்தனரே?” என்று கேட்டனர்.அதற்கு இயேசு அவர்களிடம், ”இக்கால வாழ்வில் மக்கள் திருமணம் செய்துகொள்கின்றனர். ஆனால் வருங்கால வாழ்வைப் பெறத் தகுதி பெற்ற யாரும் இறந்து உயிர்த்தெழும்போது திருமணம் செய்து கொள்வதில்லை. இனி அவர்கள் சாகமுடியாது அவர்கள் வானதூதரைப்போல் இருப்பார்கள். உயிர்த்தெழுந்த மக்களாய் இருப்பதால் அவர்கள் கடவுளின் மக்களே.இறந்தோர் உயிருடன் எழுப்பப்படுவதைப் பற்றி மோசே முட்புதர் பற்றிய பகுதியில் எடுத்துக் கூறியிருக்கிறாரே, அங்கு அவர் ஆண்டவரை, ”ஆபிரகாமின் கடவுள்,ஈசாக்கின் கடவுள் யாக்கோபின் கடவுள்” என்று கூறியிருக்கிறார்.அவர் இறந்தோரின் கடவுள் அல்ல மாறாக, வாழ்வோரின் கடவுள். ஏனெனில் அவரைப் பொறுத்தமட்டில் அனைவரும் உயிருள்ளவர்களே” என்றார்.மறைநூல் அறிஞருள் சிலர் அவரைப் பார்த்து, ”போதகரே, நன்றாகச் சொன்னீர்” என்றனர்.அதன்பின் அவர்கள் அவரிடம் எதையும் கேட்கத் துணியவில்லை.

**தியானம்:** உங்கள் வழியில் ரோஜா மலரைச் சிலரும், முட்களைச் சிலரும் தூவினார்கள் என்றால் முட்களைத் தூபுபவர்கள் மீது கோப்ப்படாதீர்கள். ரோஜா மலரை உங்கள் சட்டையில் குத்திக்கொள்ள முட்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்’’ என்கிறார், கவிஞர். அதாவது எதிர்ப்பையும் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது தான் சாமர்த்தியம். இன்றைய நற்செய்தி இயேசுவின் சாமர்த்தியத்தை விளக்குவதாக இருக்கிறது. உயிர்த்தெழுதல் இல்லை என்று நம்பிய சதுசேயர் “மூன்று நாட்களுக்குப் பின் உயிர்த்தெழுவேன் “என்று மொழிந்த இயேசுவை கேலியும் நக்கலும் செய்வதாக நடக்க இயலாத ஒரு நிகழ்வை நடந்ததாகச் சொல்லி இயேசுவை சிக்கலில் மாட்ட முயற்சிக்கின்றனர். இருப்பினும் இயேசு உயிர்த்தெளுதலைப்பற்றி போதிப்பதற்கான அற்புதமான வாய்ப்பாக இந்த சிக்கலைப் பயன்படுத்திக் கொள்கின்றார். முதலாவதாக அவர்களது வாதத்தில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டுகிறார். அதாவது இறப்பிற்குப் பின் வருகின்ற வாழ்வு இந்த வாழ்வின் தொடர்ச்சிதான் என்றாலும் தன்மை அளவில் இரண்டும் ஒன்றல்ல என்கிறார். இரண்டாவதாக உயிர்த்தெழுதல் இல்லை என்று சொல்லுவது கடவுளின் இறப்பையே மறுப்பதற்கு சமன் என்று சுட்டிக்காட்டுகிறார். அதாவது வாழ்வோரின் கடவுளிடமிருந்து நாம் வாழ்வை பெற்றுக் கொண்டுள்ளோம் என்றால் அந்த வாழ்வு கடவுளின் வாழ்வைப் போல முடிவற்றதாகத்தான் இருக்க முடியும். எனவே மனித வாழ்வு முடிவற்றது என்பதை ஏற்க மறுப்பது கடவுள் முடிவற்றவர் என்பதை ஏற்காதத்தற்கு இணையானது. கிறிஸ்து உயிர்த்தார் எனவே நானும் உயிர்ப்பேன் என்பதை உணர்ந்து வாழ்வோம். திருப்பலியில் நாம் பங்கு கொள்வோம்.